லால்குடி அருகே உள்ள பூவாளூரில் பிறந்தவர் அ.பொன்னம்பலனார். 1929-ம் ஆண்டு செங்கல்பட்டில் சுயமரியாதை மாநாட்டையும், 1932-ம் ஆண்டு துறையூரில் தமிழர் மாநாட்டையும், 1933-ம் ஆண்டு சென்னையில் நாத்திகர் மாநாட்டையும் நடத்தினார்.

பூவாளூர் அ.பொன்னம்பலனார் 1938-ம் ஆண்டு திருச்சியில் இருந்து சென்னை சென்ற இந்தி எதிர்ப்பு பேரணியை வழிநடத்தினார். கோட்டையூர் 'சண்டமாருதம்', புதுச்சேரியில் 'புதுவை முரசு' ஆகிய அரசியல் இதழ்களில் ஆசிரியராக இருந்தார்.

சின்னச் சின்னதாய்

விவசாய கடனை தள்ளுபடி செய்யக் கோரி 496 பேர் மனு

■ அரியலூர்

தேர்தல் வாக்குறுதியின்படி 5 ஏக்கருக்கு குறைவாக நிலம் வைத்துள்ள விவசாயிகளின் பயிர்க் கடன்களை முழுமையாகவும், 5 ஏக்கருக்கு அதிகமாக நிலம் வைத்துள்ள விவசாயிகளின் பயிர்க் கடனில் 50 சதவீதத்தையும் தமிழக அரசு தள்ளுபடி செய்ய வேண்டும் என வலியுறுத்தி, அரியலூர் மாவட்டம் செந்துறையை அடுத்த பரணம் கிராமத்தில் உள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கம் முன்பு விவசாயிகள் நேற்று முழக்கமிட்டனர். பின்னர், பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் 496 பேர், பயிர்க் கடனைத் தள்ளுபடி செய்யக் கோரி தனித்தனியே வங்கியில் கோரிக்கை மனுக்களை அளித்தனர்.

புதுகை, கரூர் மாவட்டங்களில் அரசு புதிய கட்டிடங்கள் திறப்பு

■ புதுக்கோட்டை/ கரூர்

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவில் அரசு மருத்துவமனையில் ரூ.3.5 கோடியில் கட்டப்பட்ட கூடுதல் கட்டிடம், திருமயம் அருகே மேலூரில் ரூ.45 லட்சத்தில் கட்டப்பட்ட துணை சுகாதார நிலைய கட்டிடம், விராலிமலை அருகே நீர்பழனியில் ரூ.65 லட்சத்தில் கட்டப்பட்ட பொது சுகாதார அலகு கட்டிடம் ஆகியவற்றை சென்னையில் இருந்து காணொலிக் காட்சி மூலம் முதல்வர் விஜய் நேற்று திறந்து வைத்தார்.

ஆவுடையார்கோவில் அரசு மருத்துவமனையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆட்சியர் எம்.அருணா கலந்து கொண்டு குத்துவிளக்கு ஏற்றினார்.

இதேபோல, கரூர் அருகே மணவாடி, இரணியமங்கலம், கழுசூர், கள்ளை ஆகிய 4 ஊராட்சிகளில் தலா ரூ.45 லட்சத்தில் கட்டப்பட்ட துணை சுகாதார நிலையங்கள், கடவூர் ஊராட்சியில் ரூ.60 லட்சத்தில் கட்டப்பட்ட சுகாதார அலகு கட்டிடம், மஞ்சநாயக்கன் ஊராட்சியில் ரூ.50 லட்சத்தில் கட்டப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் ஆகியவற்றை முதல்வர் விஜய் காணொலி மூலம் நேற்று திறந்துவைத்தார். மணவாடியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆட்சியர் சி.முத்துக்குமரன் குத்துவிளக்கேற்றினார்.

நகரில் நடப்பவை

திருச்சி

- **விமானப் போக்குவரத்து மேலாண்மை சங்கம் தொடக்க விழா:** சிறப்பு விருந்தினர்- திருச்சி விமான நிலைய இயக்குநர் ஜி.கோபாலகிருஷ்ணன், காமர்ஸ் கேலரி, ஜமால் முகமது கல்லூரி, காலை 9.30.
- **சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்வு:** பங்கேற்பு- மாநகர காவல் துணை ஆணையர் மணிமாறன், எஸ்கேபி அரங்கம், ஸ்ரீமதி இந்திரா காந்தி கல்லூரி, காலை 10.
- **தொழில்முனைவோர் மேம்பாட்டு பிரிவு தொடக்க விழா:** தலைமை- கல்லூரி முதல்வர் ஜாஹிர் ஹுசைன், ஜமால் முகமது கல்லூரி, காலை 11.30.
- **இணையம் சார்ந்த சவால்கள் குறித்த ஒளிப்பட தயாரிப்பு போட்டி;** ஸ்ரீமதி இந்திரா காந்தி கல்லூரி, காலை 11.30.
- **சொற்பொழிவு:** ஒடும் நதியின் ஓசை எனும் தலைப்பில் உரை- முனைவர் அலிபி நிஷா, திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கம், மேலரண் சாலை, மாலை 6.30.

பிளஸ் 2 முடித்தவர்கள்

உயர் கல்வியில் சேர்வதை உறுதிப்படுத்த வேண்டும்

அலுவலர்களுக்கு ஆட்சியர் அறிவுறுத்தல்

■ கரூர்

பிளஸ் 2 தேர்ச்சி பெற்ற அனைவரும் உயர் கல்வியில் சேர்வதை உறுதிப்படுத்த வேண்டும் என ஆட்சியர் சி.முத்துக்குமரன் தெரிவித்தார்.

கரூர் மாவட்ட நிர்வாகம் மற்றும் பள்ளிக் கல்வித் துறை இணைந்து நடத்தும் 100 சதவீத உயர் கல்வி சேர்க்கைக்கான சிறப்புகுறைதீர்கூட்டம் ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நேற்று நடைபெற்றது. இதில் தலைமை வகித்து ஆட்சியர் சி.முத்துக்குமரன் பேசியது:

மாவட்டத்தில் 2025-26-ம் கல்வியாண்டில் பிளஸ் 2 தேர்ச்சி பெற்ற அனைவரும் உயர் கல்வியில் சேர்வதை அலுவலர்கள் உறுதிப்படுத்த வேண்டும். தேர்ச்சி பெறாத மாணவர்கள் துணைத் தேர்வுக்கு விண்ணப்பித்துள்ளனரா என அறிந்து, துணைத் தேர்விலும் தேர்ச்சி பெறாதவர்களை ஐடிஐ, பாலிடெக்னிக் ஆகியவற்றில் சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உயர்கல்வியில்சேரஏதேனும் தகவல் பெற மாவட்ட கட்டுப்பாட்டு அறையை 95665 66727 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என்றார்.

மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அ.ராஜ், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் எஸ்.பிரகாஷ், மாவட்ட சமூக நல அலுவலர் பி.செல்வி, மாவட்ட முன்னோடி வங்கி பொது மேலாளர் வசந்தகுமார், மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) மு.சத்தியமூர்த்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

முறையாக குடிநீர் விநியோகிக்க வலியுறுத்தி

அணவயலில் பெண்கள் மறியல்

■ புதுக்கோட்டை

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி வட்டம் அணவயலில் முறையாக குடிநீர் விநியோகிக்க வலியுறுத்தி காலிகுடங்களுடன் பெண்கள் நேற்று மறியலில் ஈடுபட்டனர்.

ஆலங்குடி வட்டம் அணவயல் சந்தைப் பகுதியில் இருந்த 60 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி சேதமடைந்ததையடுத்து இடித்து அகற்றப்பட்டது. ஆனால், புதிய தொட்டி கட்டப்படவில்லை.

இதையடுத்து, இந்தப் பகுதிக்கு மின்மோட்டாரில் இருந்து நேரடியாக குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. இதனால், குடிநீரை பிரித்து வழங்க முடியாத நிலை உள்ளதால், பல பகுதிகளுக்கு குடிநீர் கிடைக்கவில்லை. மேலும், மின் தடை ஏற்பட்டு இந்த குடிநீர் விநியோகமும் பாதிக்கப்படுகிறது.

இதையடுத்து, முறையாக குடிநீர் விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி, அப்பகுதியில் பெண்கள் நேற்று காலி குடங்களுடன் மறியலில் ஈடுபட்டனர். தகவலறிந்து திருவரங்குளம் வட்டார வளர்ச்சி அலுவலர் ரமேஷ், வடகாடு போலீஸார் சென்று பேச்சுவார்த்தை நடத்தி மறியலை முடித்துக் கொள்ளச் செய்தனர்.

வண்டல் மண் அள்ளியதில் விதிமீறல்; வாகனங்கள் பறிமுதல்

■ அரியலூர்

அரியலூர் மாவட்டத்தில் விவசாயம் மற்றும் மண்பாண்ட தொழில்களுக்காக ஏரி மற்றும் குளம் போன்ற நீர்நிலைகளில் இருந்து வண்டல் மண் எடுத்துக் கொள்ள அரசு அனுமதி அளித்துள்ளது.

இந்நிலையில், செந்துறை சுற்றுவட்டார கிராம பகுதிகளில் உள்ளநீர்நிலைகளில்இருந்துவிதிகளை மீறி வண்டல் மண் அள்ளப்படுவதாக ஆட்சியருக்கு புகார் வந்தது.

இதையடுத்து, நேற்று செந்துறைபகுதிக்கு ஆய்வுக்கு சென்ற ஆட்சியர் ந.மிருணாளினி, அங்கு ஏரிஒன்றில்வண்டல்மண் அள்ளிக் கொண்டிருந்த டிராக்டர்களின் ஆவணங்களை ஆய்வு செய்தார்.

அப்போது அனுமதிக்கப்பட்ட வாகனங்களைவிட கூடுதல் எண்ணிக்கையில் வாகனங்கள் இயக்கப்படுவதும், அனுமதிக்கப்பட்ட அளவைவிட கூடுதலாக மண் வெட்டி எடுக்கப்படுவதும் தெரிய வந்தது.

இதையடுத்து, 3 பொக்லைன் இயந்திரங்கள், 10 டிராக்டர்களை பறிமுதல் செய்ய வருவாய்த் துறையினருக்கு ஆட்சியர் உத்தரவிட்டார். அனைத்து வாகனங்களையும் வருவாய்த் துறையினர் பறிமுதல் செய்தனர். இதுகுறித்து செந்துறை காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

செவிலியர்கள் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்

■ அரியலூர்/ பெரம்பலூர்

தமிழ்நாடு செவிலியர்கள் மேம்பாட்டு சங்கத்தினர் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

"பொது சுகாதாரத் துறை மற்றும் மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககத்தின் கீழ் பணிபுரியும் 292 செவிலியர்களை, அரசு மருத்துவமனைகளில் உள்ள 17 இசிஆர்சி மையங்களுக்கு மறு பணியமர்த்தும் முடிவை கைவிட வேண்டும்.

புதிதாகத் தொடங்கப்படவுள்ள 6 செவிலியர் கல்லூரிகளில் ஒப்பந்த முறையில் ஊழியர்களைப் பணியமர்த்த முடிவு செய்துள்ளதை கைவிட்டு, ஏற்கெனவே பணியில் உள்ள செவிலியர்களை அந்த இடங்களில் பணி நிரந்தரம் செய்ய வேண்டும்" என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அரியலூர் அண்ணா சிலை அருகே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு சங்கத்தின் மாவட்டத் தலைவர் மணிகண்டன் தலைமை வகித்தார்.

பெரம்பலூர் ஆட்சியர் அலுவலகம் முன்பு செவிலியர்கள் மேம்பாட்டு சங்க மாவட்டத் தலைவர் சகுந்தலா தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாவட்டச் செயலாளர் ஆனந்த் கோரிக்கைகளை விளக்கிப் பேசினார்.

அதிக மனுக்களுக்கு தீர்வு கண்டால் சுழற்கோப்பை

■ புதுக்கோட்டை

பொதுமக்களின் கோரிக்கை மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுத்த வருவாய்த் துறை அலுவலர்கள் 2 பேருக்கு சுழற்கோப்பை நேற்று வழங்கப்பட்டது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் மக்கள் அளிக்கும் கோரிக்கை மனுக்கள் மீது விரைந்து தீர்வு காணும் அலுவலர்களுக்கு, ஆட்சியர் அலுவலகத்தில் மாதத்தின் முதல் வாரம் நடைபெறும் குறைதீர் கூட்டத்தில் சுழற்கோப்பை வழங்கி ஆட்சியர் பாராட்டி வருகிறார். இதன்படி, கடந்த மாதம் அதிக மனுக்களுக்குத் தீர்வு கண்ட அறந்தாங்கி கோட்டாட்சியர் அபிநயா, புதுக்கோட்டை வட்டாட்சியர் செந்தில் ஆகியோருக்கு, ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று ஆட்சியர் எம்.அருணா சுழற்கோப்பைகளை வழங்கிப் பாராட்டினார்.

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவையாகா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர்/ அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தக் குழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

ப்ருடென்ட் ARC லிமிடெட்

பதிவு மற்றும் கார்ப்பரேட் அலுவலகம்: 611, D மால், மனை எண். A-1 நேதாஜி சுபாஷ் பிளேஸ், பிதாம்புரா, புது டெல்லி-110 034. **Tel: +91-11-45320000 | Email Id: info@prudentarc.com**
CIN: U74900DL2011PLC225445

கோரிக்கை அறிவிப்பு

பின்வரும் கடன்தாரர்கள் மற்றும் (இணை-கடன்தாரர்கள்) வங்கியிடமிருந்து தாங்கள் பெற்ற கடன் வசதிகளுக்கான அசல் மற்றும் வட்டித் தொகையைத் திருப்பிச் செலுத்துவதில் தவறியுள்ளனர் என்பதையும், அத்தகைய கடன்கள் "செயல்படாத சொத்துக்களாக (NPA) வகைப்படுத்தப்பட்டுள்ளன என்பதையும் இந்த அறிவிப்பின் வாயிலாகத் தெரிவிக்கிறோம். "நிதிச் சொத்துக்களின் பிணையமாக்கல் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பிணையை வட்டி அமலாக்கச் சட்டம் 2002"-ன் பிரிவு 13(2)-ன்கீழ், இவர்களுக்குத் தெரிவிருந்திருந்த கடிசி முகவரிகளுக்கு அறிவிப்புகள் அனுப்பப்பட்டன, ஆயினும், அவ் அறிவிப்புகள் விநியோகிக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்பட்டுவிட்டன, எனவே, இப்பொது அறிவிப்பின் வாயிலாக அவர்களுக்குத் தகவல் தெரிவிக்கப்படுகிறது.

வ. எண்.	கடன்தாரர் பெயர் / கடன் கணக்கு	சொத்துக்கள் விவரங்கள்/அமலாக்கம் செய்யவுள்ள பாதுகாப்பு சொத்துக்களின் முகவரி	அறிவிப்பு நாள்	NPA நாள்	நிலுவைத் தொகை (அறிவிப்பு தேதியின்படி)
10	"VAANAN INTERNATIONAL / UGTHTMS000000635 03"	நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை பதிவு மாவட்டம், மயிலாடுத்துறை இணை-1 சார் பதிவாளர் அலுவலகம் எல்லை, மயிலாடுத்துறை தாலுகா, எண்.60, பட்டாமங்கலம் கிராமம், ராஜாஜி தெரு, சர்வே எண். 268/2 மற்றும் பரப்பு 2000 சதுர அடி அதாவது 185.80 சதுர மீட்டர் நஞ்சை நிலம் பின்வரும் எல்லைகள்: பரப்பளவு கிழக்கு-மேற்கு இருபக்கம் - 40 அடி தெற்கு-வடக்கு இருபக்கம் - 50 அடி மொத்த பரப்பு 2000 சதுர அடி **எல்லைகள்: தெற்கு:** சாலை, **கிழக்கு:** திரு. சந்திரசேகரன் அவர்களின் நிலம், **வடக்கு:** மனை எண்.41, **மேற்கு:** T. அன்பழகி அவர்களின் நஞ்சை நிலம் மற்றும் அனைத்து அடிப்படை உரிமைகள் மற்றும் பாதை. மயிலாடுத்துறை பத்சாயத்து யூனியன் எல்லைக்குட்பட்ட சொத்து. தற்போது பட்டா எண். 1589-ன்படி, சொத்து துணை-பிரிவு சர்வே எண். 268/2ej4-க்குட்பட்டது.	02-06-2026	01-08-2025	Rs.13,93,656 (21/05/2026)

மேற்கூறிய கடன்தாரர்(கள்) மற்றும்/அல்லது அவர்களின் ஜாமீன்தாரர்(கள்) (பொருந்தும் இடங்களில்), இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் நிலுவைத் தொகையைச் செலுத்துமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். அவ்வாறு செலுத்தத் தவறும்பட்சத்தில் இந்த அறிவிப்புத் தேதியிலிருந்து 60 நாட்கள் நிறைவடைந்த பிறகு "நிதிச் சொத்துக்களின் பிணையமாக்கல் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பிணைய நலன்களை அமலாக்குதல் சட்டம் 2002"-ன் பிரிவு 13-ன் துணைப்பிரிவு (4)-ன்கீழ் அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

பிணையச் சொத்துக்களை மீட்டெடுப்பதற்குரிய கால அவகாசம் தொடர்பாக, அச்சட்டத்தின் பிரிவு 13-ன் துணைப்பிரிவு (8)-ல் உள்ள விதிமுறைகளின்படி கடன்தாரரிகளின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

நாள் : 15.07.2026, இடம் : தமிழ்நாடு — Sd/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ப்ருடென்ட் ARC லிமிடெட்

JM Financial HOME LOANS

JM ஃபைனான்சியல் ஹோம் லோன்ஸ் லிமிடெட்
CIN No. U65999MH2016PLC288534
கார்ப்பரேட் அலுவலகம் : 3வது தளம், சுசையா IT பார்க், மனை எண்.68E, தாட்டா படா சாலை பக்கம், டாடா ஸ்டீல் எதிரில், போரிவாளி (கி) மும்பை-400066.

சுவாதீன அறிவிப்பு

2002-ம் ஆண்டு நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் மறுகட்டமைப்பு செய்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம் பிரிவு 13(4)-ன் கீழும் மற்றும் 2002-ம் ஆண்டு (அமலாக்கம்) பாதுகாப்பு வட்டி சட்டம், விதி 8(1)-ன்படி.(இணைப்பு IV)

JM ஃபைனான்சியல் ஹோம் லோன்ஸ் லிமிடெட்-ன் (இனி JMFHLL குறிப்பிடப்படும்) அதிகாரபூர்வ அதிகாரியாக கீழே கையொப்பமிட்டுள்ளவர், 2002-ம் ஆண்டு நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் மறுகட்டமைப்பு செய்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம் பிரிவு 13(2)-ன் கீழும் மற்றும் அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) சட்டம், விதி 3-ன் கீழும் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை பயன்படுத்தி கடன்தாரர்/இணை-கடன்தாரர்/ஜாமீன்தாரர் ஆகியோருக்கு கோரிக்கை அறிவிப்பினை அனுப்பி கீழ்குறிப்பிட்ட தொகையை அறிவிப்பு கிடைத்த 60 நாட்களுக்குள் செலுத்துமாறு கோரியிருந்தார். கடன்தாரர்/இணை-கடன்தாரர்/ஜாமீன்தாரர் பாக்கித்தொகையை திரும்ப செலுத்த தவறிவிட்டபடியால், கடன்தாரர்/ இணை-கடன்தாரர்/ஜாமீன்தாரர் மற்றும் பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிப்பதாவது கீழ்குறிப்பிட்ட சட்ட விதி 8(1) உடன் சட்டத்தின் பிரிவு 13(4)-ன்கீழ் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழே JMFHLL சார்பாக கையொப்பமிட்டுள்ளவர் கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை சுவாதீனம் செய்துள்ளார். கடன்தாரர்(கள்)/இணை-கடன்தாரர்(கள்)/ ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில் மேற்படி சுவாதீனமான சொத்து விஷயத்தில் எவரும் எந்தவித பேரமும் வைத்துக் கொள்ளக்கூடாது. மீறி வைத்துக் கொண்டால் அது JMFHLL-க்கு செலுத்த வேண்டிய கீழ்குறிப்பிட்டுள்ள தொகையை மேலும் வட்டி சேர்த்து செலுத்துவதற்கு கட்டுபட்டதாகும்.

வ. எண்.	கடன்தாரர்(கள்)/இணை-கடன்தாரர்(கள்)/ ஜாமீன்தாரர்(கள்) பெயர் மற்றும் கடன் எண்.	அடமான சொத்தின் விவரம் (அசையா சொத்து)	1. சுவாதீனம் நாள் 2. கோரிக்கை அறிவிப்பு நாள் 3. நிலுவை தொகை
1.	1. திரு. ஆனந்த் அம்பலராஜ் 2. திருமதி. சத்தியா முருகேசன் கடன் கணக்கு எண். HTPJ24000058285	திருச்சி மாவட்டம், அரியலூர் பதிவு மாவட்டம், லால்குடி சார் பதிவாளர் அலுவலகம், ஆலங்குடி மஹாஜம் கிராமம் சொத்தானது நத்தம் எஸ்.எப்.எண். 347 இதன் புதிய எஸ்.எப்.எண். 347/31 பரப்பு 00079 சதுர மீட்டர் (850.35 சதுர அடி) மற்றும் பின்வரும் எல்லைகள்: வடக்கு : சின்னையா அவர்களின் மனை, தெற்கு : வீதி, கிழக்கு : கனகராஜ் அவர்களின் மனை, மேற்கு : வன்வோயில் மந்தாரம். கிழக்கு மேற்கு அளவுகள் : 8.1 மீட்டர் இருபக்கமும், வடக்கு தெற்கு அளவுகள் : 9.75 மீட்டர் இருபக்கமும், மொத்த பரப்பு 00079 சதுர அடி (850.35 சதுர மீட்டர்) மற்றும் ஆர்சிசி கட்டிடம், சொத்து வரி எண். 82, மின்சாரம் சர்வீஸ் இணைப்பு எண். 217 002 256 இதர.	1. 09.07.2026 2. 17.01.2026 3. ரூ.14,17,877/ (ரூபாய் பதினான்கு இலட்சத்து பதினெழாயிரத்து எண்ணூற்றி எழுபத்தி ஏழு மட்டும்) 12.01.2026 தேதியில்

நாள் : 15.07.2026
இடம் : தமிழ் நாடு
JM ஃபைனான்சியல் ஹோம் லோன்ஸ் லிமிடெட்-க்காக
Sd/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி

➤ பயிற்சி முடித்த பயனாளிகளுடன் அல்ட்ராடெக் சிமெண்ட் நிறுவன நிர்வாகிகள்.

அல்ட்ராடெக் சமூக நல அறக்கட்டளை சார்பில்

பயிற்சி முடித்தவர்களுக்கு சான்றிதழ்

■ அரியலூர்

அரியலூர் அருகே ரெட்டிபாளையம் மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த பெண்களுக்கு, ரெட்டிபாளையம் அல்ட்ராடெக் சமூக நல அறக்கட்டளை சார்பில் கடந்த 3 மாதங்களாக இலவச கணினி மற்றும் தையல்கலைப்பயிற்சிகள் வழங்கப்பட்டன.

பயிற்சி நிறைவு விழா அல்ட்ராடெக் மதுபன் கலையரங்கில் நேற்று நடைபெற்றது. இதில் பயிற்சியை வெற்றிகரமாக முடித்த பயனாளிகளுக்கு அல்ட்ராடெக் சிமெண்ட் லிமிடெட் ஆலைத் தலைவர் கருணாகர ராவ், மனிதவளத் துறை துணைத் தலைவர் தளபதி, தொழில்நுட்பத் துறை தலைவர் பாஸ்கரன் ஆகியோர் சான்றிதழ்களை வழங்கி வாழ்த்தினர்.

இந்தப்பயிற்சியின்மூலம் தன்னம்பிக்கையுடன் தொழில் தொடங்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளதாகவும், இந்த அரிய வாய்ப்பை வழங்கிய அல்ட்ராடெக் சமூக நல அறக்கட்டளைக்கும், அல்ட்ராடெக் சிமெண்ட் நிறுவனத்துக்கும் பயனாளிகள் நன்றி தெரிவித்தனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை அல்ட்ராடெக் சமூகநல அறக்கட்டளையின் முதுநிலை மேலாளர் கமலக் கண்ணன் மற்றும் அலுவலர் சிவக்குமார் ஆகியோர் செய்திருந்தனர்.

AU ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்
(ஒரு அட்டவணை வர்த்தக வங்கி)
(CIN:L36911RJ1996PLC011381)
பதிவு அலுவலகம்: 19-ஏ, துலேஸ்வர் கார்டன், அஜ்மீர் சாலை, ஜெய்பூர்-302001

இணைப்பு IV [விதி 8(1) பார்க்கவும்] சுவாதீன அறிவிப்பு (அசையா சொத்திற்காக)

AU ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட் (ஒரு அட்டவணை வர்த்தக வங்கி) அதிகாரபூர்வ அதிகாரியாக கீழே கையொப்பமிட்டுள்ளவர் இருக்கிறபடியால், 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கம் [சட்டம் 2002 (54 of 2002)] பிரிவு 13(12)ன் கீழும் மற்றும் அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதிகளில், [விதி 3]-ன் கீழும் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி **31.10.2025** தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பை வெளியிட்டார் கடன்தாரர் **சந்திரமோகன் நாராயணன் (கடன்தாரர்), பெரியநாயகி C (இணை-கடன்தாரர்), (கடன் கணக்கு எண். 22660001442172)** தொகையை அறிவிப்பு கிடைத்த 60 நாட்களுக்குள் **ரூ.3,06,623/- (ரூபாய் மூன்று இலட்சத்து ஆறாயிரத்து அறுநூற்றி இருபத்தி மூன்று மட்டும்)** அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளபடி நிலுவைத் தொகை செலுத்துமாறு கோரியிருந்தார்.

01.04.2024 முதல் இந்திய ரிசர்வ் வங்கியின் இணைப்புத் திட்டத்தின் மூலம் **பின்கேர் ஸ்மால் பைனான்ஸ் வங்கி லிமிடெட், AU ஸ்மால் பைனான்ஸ் வங்கி லிமிடெட்** உடன் இணைந்துள்ளது. இந்த இணைப்புத் திட்டத்தின் மூலம் மேற்கூறிய கடன் கணக்கு AU ஸ்மால் பைனான்ஸ் வங்கி லிமிடெட் நிறுவனத்திற்கு மாற்றப்பட்டுள்ளது, இதில் வழங்கப்பட்ட கடன்/நிதி உதவி தொடர்பாக நீங்கள் அனைவரும் செலுத்த வேண்டிய முழுத் தொகையும், அடமானம் வைக்கப்பட்ட சொத்தின் அடிப்படையில் அடிப்படை பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு வட்டி ஆகியவை அடங்கும்.

மேற்படி பாக்கித்தொகையை கடன்தாரர்/இணை-கடன்தாரர்/அடமானதாரர்/ஜாமீன்தாரர் செலுத்த தவறிவிட்டபடியால் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்/அடமானதாரர்-களுக்கு குறிப்பாகவும் இதன் மூலம் அறிவிப்பதாவது மேற்படி சட்டம் பிரிவு 13-ன் துணை-பிரிவு (4) மற்றும் அதற்குத் தொடர்புடைய மேற்படி விதிகளில் விதி 8-ல் தமக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழே கையொப்பமிட்டுள்ளவர், கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை **10.07.2026** அன்று சுவாதீனம் செய்துள்ளார்.

கடன்தாரர்/இணை-கடன்தாரர்/அடமானதாரர்/ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும், பொது மக்களுக்கு பொதுவாகவும் இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில் சுவாதீனமான சொத்து விஷயத்தில் எவரும் எவ்வித பேரமும் வைத்துக் கொள்ளக்கூடாது. மீறி வைத்துக்கொண்டால் அது **AU ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்**-க்கு செலுத்தப்பட வேண்டிய பாக்கித்தொகை **31.10.2025** அன்றைய **ரூ.3,06,623/- (ரூபாய் மூன்று இலட்சத்து ஆறாயிரத்து அறுநூற்றி இருபத்தி மூன்று மட்டும்)** மற்றும் கடனுக்கான வட்டி உட்பட குறிப்பிடப்பட்ட வட்டி, தொகைகள், கட்டணங்கள், முழு தொகை செலுத்தும் வரை உள்ள செலவினங்கள் இதரவை சேர்த்து செலுத்துவதற்கு கட்டுப்பட்டதாகும்.

"கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை மீட்பதற்குரிய கால வரம்பு குறித்து சட்ட பிரிவு 13 துணை பிரிவு (8) அதனுடன் கூடிய 8(6) ஷரத்துக்களின்படி அதாவது 30 நாள்கள் அறிவிப்பாக கடன்தாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது."

அசையா சொத்துக்கள் விபரம்

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தாலுகா, புதுக்கோட்டை பதிவு மாவட்டம், புதுக்கோட்டை சார்-பதிவு மாவட்டம், மணியம்பாலம் கிராமம், நத்தம் மனைவாரிபடி பட்டா எண். 87 பழைய சர்வே எண். 71/1 புதிய சர்வே எண். 71/20 தொடர்பான நத்தம் பிரிக்கப்படாத 5/6 பங்கு, பரப்பு 155 சதுர மீட்டர்கள் சமமான 1668.42 சதுர அடியில் 129.17 சதுர மீட்டர்கள் சமமான 1390 சதுர அடி மற்றும் மேல்மாடி வீடு, ஆழ்துளை கிணறு சுற்றுச்சுவர், மின்சாரம் இணைப்பு பிட்டிங்ஸ் மற்றும் இணைப்பு உட்பட. கிராமம் எண். 68, சொத்து வரி எண்.91, மின்சாரம் இணைப்பு எண். 06-156-007-7, (இனிமேல் "கூறிய சொத்து" என்று குறிப்பிடப்படும்) மற்றும் மேலும் இதற்கு கீழே எழுதப்பட்டுள்ள முதல் அட்டவணையில் விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. **கிழக்கு: லேன், செல்வம் அவர்களின் வீட்டு சொத்து, மேற்கு: பன்னீர்செல்வம் அவர்களின் வீட்டு சொத்து, சிதம்பரம் அவர்களின் வீட்டு சொத்து, வடக்கு : கிழக்கு மேற்கு தார் சாலை, தெற்கு: கால்வாய்.**

நாள் : 10.07.2026
இடம் : புதுக்கோட்டை, தமிழ்நாடு
-sd/-
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
AU ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்

**ujj